கண்டன் வினவிசை கனவிசை ஈழமும் ஆழமும் ஒரப்பான பட்டணமும் ரதபதி கெசபதி அசுவபதி நரபதி நால்வகைப் படையோடுங்கூடி கெசவேட்டை கொண்டருளிய ராசாதிராசன் ராசமார்த்தாண்டன் ராசகுலதிலகன் ராசகெம்பீரன் நாடாளு நாயகன் றாடகுலதுங்கன் பூலோகதேவேந்திரன் ஆரணமுரையார் ஆறிலொன்று கடமை கொண்டு ஆடுங்கடைமணி நாவசையாமல் அரசாளும் கரிகால்சோழன் மகாராசாவய்யரவர்கள் யகமகிழ்ந்து கொடுக்கும் மக்கள்முறையும் தரிப்பான நன்மையும் பொருந்தி யிருந்தபடியினாலே பொன்னூஞ்சலும் பூந்தேரும் பூச்சக்கரக் குடையும் பெற்றருளிய கங்காகுலதிலகன் காராள சிரோமணி மேழிக் கொடியோன் மின்குவளை மாலிகைமார்பன் நாற்பத்தி யெண்ணாயிரம் கோத்திரத்துக்கும் முதன்மையாயிருக்கும் கொங்கு தேசத்துக்குச் சேர்ந்த தென்கரைநாட்டு செட்டி வேணா வுடையான், நரையநாடு காசிப கோத்திரம் பிரமியண பிள்ளை, பொங்கலூரு தெய்வசிகாமணி, பூந்துறைநாடு வாரணவாசி, வெள்ளோட்டுக் கனகபுரம் நஞ்சையன், ஆருநாட்டு மசக்காளி வேலணன், குருப்பைநாட்டு ரகுநாதணன், ஒடுவெங்கநாடு முத்து வேலப்பன், நல்லுருக்கா நாடு வாணவராயன், வாரக்கநாடு பொங்கணன், காவுலுக்காநாடு உடையணன் எங்களைப் பத்துப் பேரையும் காங்கய நாட்டுச் சரவண காங்கேயன் பார்த்துச் சொன்ன வசனம்.

கனகபுரத்து நஞ்சையன் மகன் லிங்கையன் வாணியாற்றில் அணைகட்ட வேணுமென்று நம்மையுந் தாவுதுறை பார்த்துவரச் சொல்ல வேணுமென்று யீரோட்டுக்கு யெங்களை அழைத்துக்கொண்டு போய் வாணியில் தாவுதுறை அணைகட்டுகிறதற்குப் பார்த்த இடத்தில் வெள்ளோட்டிலிருக்கும் வெள்ள வேட்டுவன் பாளையக்காரன் யென்னுடைய எல்லையிலே தாவுதுறை பார்க்கிறதென்ன அணை கட்டுகிறோமென்று பேசுகிறதென்ன நீங்கள் அணைகட்ட வேண்டாமென்று பிலத்துடனே மறித்தான்.

அதன் பிறகு நாங்கள் பத்து பேரும் ஈரோட்டுக்கு வந்து அதுக்குத் தக்கின சோமாசிகளை அனுப்பிவிச்சு வெகு பிரீதியுடனே சொல்லக் கேளாதபடியினாலே இவனுடைய கெருவத்தை யடக்கி அந்தத் தாவில் அணை கட்டாமல் விட்டுப் போறதில்லையென்று பிரதிக்கிணை செய்து அவையஸ்தங் குடுத்து ரண்டு மூணு மாசவரைக்கும் அவனுடனே சண்டை செய்து யெங்களினாலே செயிக்க மாட்டாமல் எழச்சுப் போயிருக்கும் வேளையிலே எண்ணமங்கலம் பதியிலேயிருக்கும் காளியண்ணன் மதுரைக்குப்போய் சமஸ்தானம் ஆளப்பட்ட உக்கிர குமாரராசா சமூகத்துக்குப் போயி வெகுமதியும் கட்டக்கயிரும் வெட்ட வாளும் துஷ்ட சம்மாரமும் சிஷ்ட பரிபாலனமும் செய்து கொண்டு யிருக்கச் சொல்லி வரப்பிரசாதம் வாங்கிக்கொண்டு ஆனைமலை நாட்டு பாளையப்பட்டு செங்கோல் செலுத்திக் கொண்டு இருக்கிற நாளையிலே நாங்கள் பத்துபேருங் கூடி காலிங்கராயனை ஆனைமலைக்கு அனுப்பிவிட்டு காளியணனை யீரோட்டுக்கு வரவழைத்து வெள்ளவேட்டுவன் விருத்தாந்த மெல்லாம் வழிவிபரமாய்ச் சொல்லி அவனைச் செயம்பண்ணி அந்த ஆற்றில் அணை கட்டுகிற படிக்குச் செயிச்சுக் கொடுக்க வேணுமென்று மெத்தவும் பத்துப்பேருங் கூடி வெகு விதத்திலே கேட்டுக்கொண்டதுனாலே நல்லது என்று சம்மதிச்சு அந்த வெள்ள வேட்டுவன்